[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. வடிவேலு, மு. அம்பிகாபதி, செ. சதாசிவம், சின்ன சேலம் மா. சுப்பிரமணியம், இரா. தாமரைக்கனி ஆகியோர், பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, ''சென்னை பல்லர்வரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் அவர்களிடையே நிலவும் பதட்ட நிலை'' குறித்து அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்ட குவாரி மற்றும் கல் உடைக்கும் தொழிலாளர் சங்கம் 21.12.78 அன்று தொழிலாளர் துறை ஆணையரிடம் மேற்படி தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டங்களின் பல்வேறு பிரிவுகளை அமுல் செய்ய கோரிக்கை விடுத்தது. அச்சங்கத்தின் கோரிக்கைகள் ஆவன. (குறுக்கீடு(தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்திருக்கின்ற 9 கோரிக்கைகள் இருக்கின்றன. இந்த விவரங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இவை அத்தனையும் படிக்கவேண்டுமா, நேரம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் படிக்கவேண்டும் என்கிறார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரிடம் கேட்டால் படியுங்கள் என்றுதான் சொல்லுவார்கள். நீங்களாக பார்த்து முடிவு செய்து பதிலைச் சொல்லவேண்டும்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இவர்கள் ஒன்பது கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை தொழிலாளர் துறை ஆணையர் பரிசீலித்துக் கொண்டிருக்கும் போதே இச்சங்கத்தினர் 28.3.1979 அன்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது.

[1979 ஏப்ரல் 26]

மேற்கொண்டு தொழிலாளர் துறை ஆணையரின் முயற்சிக்கிணங்க மேற்படி தொழிலாளர் சங்கத் தலைவர் 24.3.1979-ந் தேதிய கடிதத்தில் ஆணையர் அலுவலகம் முன்பு நடத்தப் போவதாகவிருந்த போரட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளார். ஆகவே ஆணையாளர் அலுவலகம் முன்பு இந்த தொழிலாளர்கள் எந்தவிதமான போராட்டமும் நடத்தவில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல் உடைக்கும் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்படுகிறார்கள். இவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. தங்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம் என்று அறிவித்திருந்தார்கள். அதன் பிறகு இந்தச் சங்கத்தின் கோரிக்கைகள் மீது முறையான பேச்சுவார்த்தைகள் நடைபெறாமல் இன்னும் தீராமல் இருந்து வருகின்றன. எந்த ஒரு பிரச்னையாக இருந்தாலும் அதை காலந்தாழ்த்தி கவனிப்பது என்பது தான் அரசாங்கத்தின் வழக்கமாக இருந்து வருகிறது. இவர்களுடைய கோரிக்கையும் அப்படியே இருக்கிறது. இதை மாற்றி, இந்த கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு பாதுகாப்பு தருவது அரசியல் சட்டம் அல்ல, பாக்டரி ஆக்டும், மைன்ஸ் ஆக்டும் தான் பாதுகாப்பு தரவேண்டும். குவாரி என்று வரும்போது அது மத்திய அரசு தான் பார்த்துக்கொள்ளவேண்டும். இப்போது இந்த கல் உடைக்கும் தொழிலாளர்களை எல்லாம் பாக்டரி சட்டத்தின் கீழ் கொண்டு வர இருக்கிறோம். இதுவரை எப்படியோ முதலாளிகள் தப்பித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் 23 முதலாளிகள் நடத்தக்கூடிய இந்ததொழிலில், மூன்று அதிபர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ளவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ஆறு பேர்கள் மீது ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 23 முதலாளிகளின் கீழ் இருக்கும் அத்தனை தொழிலாளர்களையும் பாக்டரி ஆக்டின் கீழ் கொண்டு வந்தால்.. Under the Factories Act, 1948 அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்கும் என்ற காரணத்தால், அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இந்த கல் உடைக்கும் தொழிலிலே சுமார் 10,000 பேர்கள் அந்தப் பகுதியிலே இயங்குவதாகவும், அவர்களை பாக்டரி ஆக்டின்கீழ் கொண்டு வந்து, அதை உடனடியாக அமுலுக்கு கொண்டு

வருவதற்கும், அந்த முதலாளிகளையும் இந்த பாக்டரி ஆக்டின் கீழ் கொண்டு வருவதற்குமான வழிவகைகளை இந்த அரசு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மூன்று பேர்களை பிராசிகியூஷன் செய்திருக்கிறோம்; ஆறு பேர்கள் மீது 'ஷோ காஸ்' நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். இதே தான் மற்றவர்களுக்கும். பார்த்தாயா, ஒன்பதுபேர்கள்மீது ஒழுங்குநடவடிக்கைஎடுத்திருக்கிறோம். நீங்களும் இந்த பாக்டரி ஆக்டின் கீழ் வந்து விடுங்கள் என்பதற்காக இப்படிச் செய்திருக்கிறோம். இதை எல்லோரும் புரிந்து கொள்வார்கள். ஆகவே, இந்த அரசு இத்தனை ஆண்டு காலமாக மறைந்து, தப்பித்துக் கொண்டிருந்த முதலாளிகளை இழுத்து, பாக்டரி சட்டத்தின்கீழ் கொண்டுவந்து, தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தொழிலாளர்களுக்கு பல நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் இந்த அரசையும், புரட்சித் தலைவர் அவர்களையும் வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த சென்னையிலே, பல்லாவரம் குவாரியிலே தொழிலாளர்கள் பிரச்னை நீண்ட நாட்களாக இருக்கிறது. அங்கே கான்ட்ராக்டர் ஒரு தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தை அமைத்து, ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். அதனால் அந்த கான்ட்ராக்டர் மீது நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க புதிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இதுமாதிரி தொழிற்சாலை நடத்தும்போது, 'இம்மீடியட் எம்ப்ளாயர் அண்டு பிரின்சிபில் எம்ப்ளாயர்' என்று உண்டு. இதிலிருந்து அந்த முதலாளிகள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி முதலாளிகள் தப்பித்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும், தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவும் இந்த அரசு தக்க நடவக்கைகள் எடுக்கும். இன்னும் போகப் போக பார்க்கப் போகிறீர்கள். தாமரைக்கனி பாராட்டுவதற்கு 4, 5 நாட்கள் கொடுக்கவேண்டியிருக்கும். தொழிலாளர்களுக்கு தொடர்ந்து நன்மைகள் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம்.